**செய்தி வெளியீடு எண்:26** **நாள்: 16.01.2013**

<u>செய்தி வெளியீடு</u>

பெருகி வரும் நகர்ப்புற மக்கள் தொகைக்கு ஏற்ப, பேரூராட்சிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர், திடக் கழிவு மேலாண்மை, பாதாள சாக்கடைத் திட்டம் போன்ற கட்டமைப்பு வசதிகளில் கூடுதல் தேவைகளைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

சுகாதார வசதியை மேம்படுத்த அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் சுத்திகரிப்பு நிலையத்துடன் கூடிய பாதாள சாக்கடைத் திட்டங்களை அனைத்துப் பேரூராட்சிகளிலும் செயல்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு முடிவெடுத்துள்ளது.

இதன் அடிப்படையில் 2012-13 ஆம் ஆண்டு, முதற்கட்டமாக, செங்கம், பெண்ணாடம், பெருந்துறை, வேளாங்கண்ணி மற்றும் பழனிச்செட்டிப்பட்டி ஆகிய 5 பேரூராட்சிகளில் 166 கோடியே 38 லட்சம் ரூபாய் செலவில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்த நிர்வாக ஒப்புதல் வழங்கி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

வளர்ந்து வரும் நகர்ப்புற மக்கள் தொகைக்கு ஏற்ப நகரக் கட்டமைப்புகளை அதிகப்படுத்துவதிலும், மேம்படுத்துவதிலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

சென்ற ஆண்டு, அதாவது 2011-12 ஆம் ஆண்டு, மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த 506 கோடியே 48 லட்சம் ரூபாயும், பேருராட்சிப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த 250 கோடியே 80 லட்சம் ரூபாயும், ஆக மொத்தம் 757.28 கோடி ரூபாய் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் ஒதுக்கீடு செய்யப்பட்டு பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதே போன்று, இந்த ஆண்டு அதாவது 2012-13 ஆம் ஆண்டிலும், ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடர்ந்து செயல்படுத்திட, சென்னை தவிர பிற மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கு 500 கோடி ரூபாயும், பேரூராட்சிகளுக்கு 250 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 750 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இது தவிர, ஜப்பான் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளின் உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களின் மூலம் ஏராளமான பணிகள் நகராட்சிகள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நகராட்சிகளின் மூலம் நிறைவேற்றப்படவிருக்கும் மக்கள் நலப் பணிகளுக்காக நிதி ஒதுக்கினால் மட்டும் போதாது, அப்பணிகளை நிறைவேற்றி மக்களிடம் கொண்டு செல்வதற்கு தகுந்த பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். இதனைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் நகராட்சிகள் நிர்வாகத் துறையில், பணியாளர் செலவினம் 49 விழுக்காடுக்கு அதிகமாக உள்ள நகராட்சிகளில் காலியாக உள்ள 620 பணியிடங்களையும், இதர நகராட்சிகளில் காலியாக உள்ள 1,182 பணியிடங்களில், மக்கள் நலப் பணிகளை நிறைவேற்ற தேவையான அத்தியாவசியமான பணியிடங்களை நிரப்புவதற்கும் ஆணையிட்டுள்ளார்கள்.

அரசின் இந்த நடவடிக்கைகள் மூலம், நகராட்சிகளில் வசிக்கும் மக்கள் நல்ல சுற்றுப்புற சுகாதார சூழ்நிலையுடன் வாழ்வதற்கு வழிவகை ஏற்படும்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9.
நாள்:- 16.1.2013.